T.C. 61

037/DM/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR OFFICERS OF THE CO-OPERATIVE DEPARTMENT – CO-OPERATIVE CREDIT AND BANKING

(Without Books)

Maximum Time : 2 hours

Maximum Marks : 80

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **<u>within first 10 minutes</u>** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answer all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.

விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.

வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் **rough work** எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best**.

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.

வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.

விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.

மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.

வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. What is meant by liquidity for a banker while lending?

(A) Borrower is in position to service interest

(B) Borrower pays the installment in time

(C) Banker does not face Asset liability Mismatch

(D) Borrower need to pay in time.

பண மதிப்புடைய பொருட்களின் கையிருப்பை வங்கியாளர் கடன் கொடுக்கும் போது எப்படி எடுத்துக் கொள்கிறார்?

(A) கடனாளியால் வட்டியை கட்ட முடியும்

(B) கடனாளியால் தவணை தொகையை குறிப்பிட்ட காலத்தில் செலுத்த முடியும்

(C) வங்கியாளருக்கு கடனாளியின் சொத்து மற்றும் கடன்களின் விகிதாச்சாரம் பற்றிய கவலை இல்லை

(D) கடனாளியால் குறிப்பிட்ட காலத்தில் கடனை செலுத்த முடியும்

2. The functions of a credit policy do not include defining of

(A) Branch expansion network

(B) Thrust areas in relation to credit culture

(C) Acceptable level of risk

(D) Profit objectives

வங்கியின் கடன் கொள்கை கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியது இல்லை?

(A) வங்கிக் கிளைகளின் விரிவாக்கம்

(B) கடன் வழங்குவதற்கான பகுதிகளை கண்டறிதல்

(C) பாதிப்பின் தன்மையை நிர்ணயித்தல்

(D) இலாப நோக்கு

3. Under which guidelines the exposure norms fall?

(A) Statutory

(B) Regulatory

(C) Prudential

(D) Statutory and Regulatory

கடன் வழங்குவதற்கான கொள்கைகளில் பயன்படுத்தப்படும் விதிமுறைகள்?

(A) சட்டப்பூர்வமானது

(B) ஒழுங்கு முறைபடுத்தப்பட்டது

(C) புத்திசாலித்தனமான தீர்மானங்கள்

(D) சட்ட பூர்வம் மற்றும் ஒழுங்குமுறைபடுத்தப்பட்டது

4. Fixed Assets are normally acquired out of

(A) Short term loans from banks or from the market

(B) Equity and Term liabilities

(C) Cash Credit facilities

(D) Over Draft facilities

அசையா சொத்துக்கள் வழக்கமாக கீழ்க்கண்ட முறையில் வாங்கப்படுகின்றன

(A) வங்கிகள் அல்லது சந்தை மூலம் வாங்கப்படும் குறுகிய கால கடன்கள்

(B) பங்கு மூலதனம் மற்றும் நீண்ட கால கடன்கள்

(C) காசுக்கடன் வசதி

(D) மிகைப்பற்று வசதி

5. How profitability of the bank is aided by Credit policy?

(A) By Bad qualitly ending

(B) By ensuring adequate returns on loans

(C) Losing of market share

(D) By getting collateral security

கடன் கொள்கை வங்கிகளின் இலாபத்திற்கு எவ்வாறு உதவுகிறது?

(A) முறையில்லாத தவறான கடன் வழங்குதல்

(B) கடன்களுக்கு தகுந்த வட்டி கிடைப்பது

(C) சந்தையில் வங்கியின் பங்கில் இழப்பு

(D) இணையான பிணையங்கள் பெறுதல்

6. Which one of the following characteristics is not included in 3 "R" concepts in the appraisal?

(A) Reliability

(B) Resources

(C) Responsibility

(D) Rating

தர மதிப்பீட்டில் கீழ்க்கண்டவற்றில் ஒன்று 3 "ஆர்" கொள்கையில் சேர்க்கப்படவில்லை?

(A) நம்பகத்தன்மை

(B) கைவசம் இருக்கும் சொத்துக்கள்

(C) பொறுப்பு

(D) மதிப்பீடு

7. Credit Risk is generally measured by

(A) Status reports from existing bankers

(B) By study of three years statement of accounts

(C) By credit rating / Scoring

(D) Character of borrower

கடன் வழங்குவதில் உள்ள அபாயங்கள் பொதுவாக கீழ்க்கண்டவற்றால் அளவிடப்படுகிறது?

(A) முந்தைய வங்கியாளரிடமிருந்து பெறப்படும் மதிப்பு அறிக்கை

(B) சென்ற மூன்று வருடங்களுக்கான கணக்கு வழக்குகளை ஆராய்தல்

(C) கடன் தகுதிக்கான மதிப்பெண்

(D) வாடிக்கையாளரின் குணநலன்கள்

8. Pricing of loans should be related to

(A) Inter bank borrowing rate

(B) RBI refinance rate

(C) Risk rating and credit quality of the borrower

(D) Market Rate

கடன்களுக்கான வட்டி விகிதம் கீழ்க்கண்டவற்றோடு சம்பந்தப்பட்டுள்ளது?

(A) வங்கிகளுக்கு இடையேயான வழங்கப்படும் கடனுக்கான வட்டி விகிதம்

(B) ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா வழங்கும் மறுசுழற்சி கடனுக்கான வட்டி

(C) கடனாளியின் கடனை செலுத்துவதற்கான திறமை மற்றும் அதிலுள்ள அபாயங்கள்

(D) சந்தையில் காணப்படும் வட்டி விகிதம்

9. What does Debt service coverage ratio measures?

(A) Total borrowings Vis-a-Vis Networth

(B) Short Term Borrowings Vis-a-Vis Networth

(C) Total Cash Generation Vis-a-Vis repayment obligations

(D) Capacity to service interest on term borrowings

கடனை திருப்பிச் செலுத்துவதற்கான தகுதி (Debt coverage ratio) எந்த முறையில் அளக்கப்படுகிறது?

(A) மொத்த கடனுக்கும் கடனாளியின் சொத்துக்கும் உள்ள விகிதம்

(B) குறுகிய கால கடனுக்கும், கடனாளியின் சொத்துக்கும் உள்ள விகிதம்

(C) கடனைதிருப்பிச் செலுத்துவதற்கான தொகைக்கும், கடனாளியின் வருமானத்திற்கும் உள்ள இலாபம்

(D) நீண்ட கால கடன்களுக்கான வட்டியை திருப்பிச் செலுத்தும் தகுதி

10. What does Breakeven point signify?

(A) It is the point of time when cash inflows match cash outflows

(B) It is the point of production when there is no profit and no loss

(C) It is the point of production when variable cost are equal to fixed costs

(D) Calculates the fixed deposits.

வணிக ஆதாயச் சமநிலை (Break even point) எதைக் குறிக்கிறது?

(A) பண வரவும், செலவும் சமமாக இருக்கும் நிலைமை

(B) இலாபமும், நட்டமும் சரியாக இருக்கும் நிலைமை

(C) நிலையான செலவினங்களும், மாறுபடும் செலவினங்களும் சரியாக இருப்பது

(D) நிலையான வைப்புத் தொகையை கணக்கிடுதல்

11. Financing under syndication is for the purpose of

(A) Overcoming the liquidity problem of the bank

(B) Borrower will be comfortable with more number of banks

(C) Spreading of risk involved in extending large loans.

(D) Distribution of Profit / Loss

வங்கிகளில் கூட்டாக கடன் (syndication) வழங்குவதற்கான காரணங்கள்?

(A) குறிப்பிட்ட வங்கியில் போதுமான அளவு நிதி இல்லாமை

(B) கடனாளிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வங்கி சேவைகள் வசதியாக இருப்பது

(C) பெருந்தொகையான கடன் வழங்குவதில் உள்ள தீமையை பரவலாக்குதல்

(D) இலாப நட்டங்களை பகிர்ந்தளித்தல்

12. A deferred payment Guarantee is

(A) Performance Guarantee

(B) Financial Guarantee

(C) Co-acceptance facility

(D) Property Guarantee

ஒத்தி வைத்து தரப்படும் பணத்துக்கான உத்தரவாதம் எந்த வகையை சார்ந்தது?

(A) செய்து முடிப்பதற்கான உத்ரவாதம்

(B) பணத்திற்கான உத்ரவாதம்

(C) கூட்டாக ஒப்புக்கொண்டதற்கான வசதி

(D) சொத்துக்கள் மீதான உத்ரவாதம்

13. Banking Regulation Act is applicable to

(A) Urban Co-operative Banks

(B) Primary Agricultural Co-operative Credit Societies

(C) Co-operative Market Societies

(D) Weavers Co-operative Societies

வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் கீழ்க்கண்ட வங்கிக்கும் பொருந்தும்

(A) நகர கூட்டுறவு வங்கி

(B) தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்

(C) கூட்டுறவு விற்பனைச் சங்கம்

(D) நெசவாளர் கூட்டுறவு சங்கம்

14. CIBIL verification can be waived if

(A) The value of security is 200% of the advance

(B) The borrower is in possession of two or more credit cards

(C) Cannot be waived at all

(D) Credit score is above the limit

சிபில் (CIBIL) மதிப்பீட்டிலிருந்து கீழ்க்கண்டவற்றுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது?

(A) கடனுக்கு துணையாக வழங்கப்படும் சொத்து 200% இருந்தால்

(B) கடனாளியிடம் ஒன்றுக்கு மேற்பட்ட கடன் அட்டை வசதி இருந்தால்

(C) விலக்கு அளிக்க முடியாது

(D) கடன் மதிப்பீடு அளவை தாண்டி இருந்தால்

15. A mortgage is created on 01.01.2013. it is enforceable up to

(A) 01.01.2014 (B) 01.01.2015

(C) 01.01.2016 (D) 01.01.2025

01.01.2013 அன்று உருவான அடமானம் எது வரை செல்லுபடியாகும்?

(A) 01.01.2014 (B) 01.01.2015

(C) 01.01.2016 (D) 01.01.2025

16. In a pledge the following are with the banker

(A) possession (B) ownership

(C) both possession and ownership (D) joint owner of banker and borrower

பிணைக் கடனில் கீழ்க்கண்டவை வங்கியின் பொறுப்பில் இருக்கும்?

(A) பொருளை வைத்துக் கொள்ளுதல் (B) பொருளின் உரிமையை மாற்றம் செய்தல்

(C) பிணையப் பொருளும் அதன் உரிமையும் (D) கடனாளி வங்கி கூட்டு உரிமையாளர்கள்

17. The main aim of supervision and follow up in credit monitoring is

(A) Ensure full capacity utilization

(B) Regular submission of MIS

(C) Ensuring end use and safety of funds lent

(D) Collection of instalement

கடன்களை மேற்பார்வை இடுவதும் கண்காணிப்பதும் கீழ்க்கண்ட காரணங்களுக்காக செய்யப்படுகிறது

(A) கடனாளி முழுமையாக கடனை பயன்படுத்திக் கொண்டாரா

(B) வங்கிக்கான ஆவணங்களை குறித்த காலத்தில் சமர்ப்பிக்கிறாரா?

(C) கொடுத்த கடனை முழுமையாக பயன்படுத்திக் கொண்டாரா?

(D) தவணை தொகையை வசூலிப்பது

18. Who elect the officials to manage the society?

(A) The members of the society

(B) The regulatory authorities under Cooperative Act

(C) The beneficiaries of the society

(D) The registering authority under the Cooperative Act

கூட்டுறவு சங்கங்களில் அலுவலர்கள் யாரால் தேர்வு செய்யப்படுகிறார்கள்?

(A) சங்கத்தின் உறுப்பினர்களால்

(B) கூட்டுறவு சங்க சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட அதிகாரிகளால்

(C) சங்கத்தின் பயனாளிகளால்

(D) கூட்டுறவு சங்க சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட பதிவாளர்களால்

19. For which of the function of the bank KYC norms are applicable?

(A) For opening new account

(B) For opening new deposit account.

(C) For identification of NPA accounts

(D) For stock and security verification.

வாடிக்கையாளரை அறிந்து கொள்ளும் திட்டம் எதற்கு பொருந்தும்

(A) புதிய சேமிப்பு கணக்கு ஆரம்பித்தல்

(B) புதிய வைப்பு கணக்கு ஆரம்பித்தல்

(C) வராக்கடன்களை கண்டுபிடிப்பதற்கு

(D) பிணையம் மற்றும் சொத்தை தெளிவாக்குவதற்கு

20. Can the Banking 'Ombudsman' undertake any other work than of his office?

(A) Yes, as the appointment of Banking ombudsman is honorary

(B) Yes, if RBI permits can undertake honorary work

(C) No.

(D) Yes, if the banking 'Ombudsman' can handle both the jobs properly

ஓம்பட்ஸ்மேன் தனக்கு அளிக்கப்பட்ட வேலையை தவிர மற்ற வேலைகளில் ஈடுபடலாமா?

(A) ஆம், அவருடைய பதவி பெருமைபடுத்தப்படுவதற்கான பதவி

(B) ஆம், ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா அனுமதியளித்தால்

(C) இல்லை

(D) ஆம், இரண்டு வேலைகளையும் சரியாக செய்வதாக இருந்தால்

21. Time norm for disposal of loan application below Rs. 25,000 under priority sector is ————— days.

(A) 15 days (B) 10 days

(C) 30 days (D) 45 days

ரூ.25,000 க்கும் குறைவான முன்னுரிமை கடன் விண்ணப்பங்களை கீழ்க்கண்ட நாட்களுக்குள் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும்?

(A) 15 நாட்கள் (B) 10 நாட்கள்

(C) 30 நாட்கள் (D) 45 நாட்கள்

22. At what rate of interest the debtor required to pay the amount to MSME for delayed payment?

(A) At PLR rate of the bank with monthly compound is.

(B) At bank rate fixed by the RBI.

(C) At 2% more if initially any rate of interest is agreed to be paid

(D) Three times the bank rate with monthly compounding

தவணை கடந்த கடனுக்கு எம்.எஸ்.எம்.இ (MSME) கடனாளி எந்த வட்டி விகிதத்தல் செலுத்த வேண்டும்?

(A) பி.எல்.ஆர்.ரேட் (PLR rate) கூட்டு வட்டியுடன்

(B) ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா நிர்ணயித்துள்ள வங்கி வட்டி

(C) நிர்ணயித்துள்ள வட்டிக்கு நிகரான 2%

(D) வங்கி வட்டி விகிதத்திற்கு மேலான மூன்று மடங்கு(மாதாந்திர கூட்டு வட்டியுடன்)

23. Why Treasury bills are zero risk investments?

(A) As they are short term investments backed by government of India.

(B) As the CRAR Calculation module assign zero risk weight to it.

(C) Market has experience that treasury bills have never failed up till now.

(D) Because these bills are guaranteed by RBI.

கருவூல பத்திரங்கள், ஏன் எந்த விதமான பாதிப்பும் இல்லாத சேமிப்பாக கருதப்படுகிறது

(A) இந்திய அரசு உறுதி அளித்துள்ள குறுகிய கால சேமிப்பு பத்திரம்

(B) இடர்நிறை சொத்துக்களுக்கான மூலதன விகிதம் (சி.ஆர்.ஏ.ஆர்)–ன் படி எந்த வித பாதிப்பும் இல்லை

(C) இதுவரை கருவூல பத்திரங்களில் செய்த முதலீடுகளால் எந்த பாதிப்பும் இல்லை

(D) கருவூல பத்திரங்களுக்கு ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா உத்தரவாதம் அளித்துள்ளது

24. Upper limit prescribed for RTGS transaction is

(A) Rs. 1 Lakh (B) Rs. 2 Lakhs

(C) Rs. 5 Lakhs (D) No upper limit

நிகழ் நேர மொத்த தீர்வு (ஆர்.ட்டி.ஜி.எஸ்) மூலம் பணம் அனுப்புவதற்கான உட்ச பட்ச தொகை?

(A) ரூ. 1,00,000 (B) ரூ. 2,00,000

(C) ரூ. 5,00,000 (D) எந்த உச்ச வரம்பும் கிடையாது

25. PIN-less ATM Access is done through

(A) Smart Card
(B) Pass Word
(C) Iris
(D) Credit Card

தனிநபர் அடையாளக் குறியீட்டு எண் (ப்பி.ஐ.எண்) இல்லாமல் ஏ.டி.எம்–ஐ கீழ்கண்ட முறையில் அணுகலாம்?

(A) ஸ்மார்ட் கார்டு
(B) பாஸ்வேர்டு
(C) கண் கருவிழிப் படலம்
(D) கடன் அட்டை

26. Software that is downable off the Internet at no cost is

(A) Spyware
(B) Shareware
(C) Freeware
(D) Adware

எவ்வித செலவும் இல்லாமல் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யக்கூடிய மென்பொருள்

(A) ஸ்பைவேர் (Spyware)
(B) ஷேர்வேர் (Shareware)
(C) ப்ரீவேர் (Freeware)
(D) ஆட்வேர் (Adware)

27. The Co-operative Flag has

(A) Tri colours
(B) Four colours
(C) Five colours
(D) Seven colours

கூட்டுறவு கொடியின் நிறங்கள்

(A) மூன்று நிறங்கள்
(B) நான்கு நிறங்கள்
(C) ஐந்து நிறங்கள்
(D) ஏழு நிறங்கள்

28. In Core Banking Systems (CBS)

(A) Store and forward of transactions is done
(B) Branch Server
(C) Local database is not required
(D) Transaction cannot happen from a non home branch

மைய வங்கி அமைப்பு (CBS) என்பது

(A) சேமிப்பதும் அனுப்புவதும் செய்யப்படுகிறது
(B) கிளை இணைப்பு (Server)
(C) கிளையில் உள்ள பதிவுகள் தேவை இல்லை
(D) உள்ளீடுகள் வேறு ஒரு கிளையில் பண்ண முடியாது

29. Customer must maintain a account and also balance for use of

(A) Credit Card (B) Smart Card

(C) Magnetic Card (D) Debit Card

கீழ்க்கண்ட கார்டு வசதி உபயோகிக்க வாடிக்கையாளர் வங்கியில் கணக்கும் போதுமான பணமும் வைத்திருக்க வேண்டும்

(A) கிரெடிட் கார்டு (B) ஸ்மார்ட் கார்டு

(C) மேக்னடிக் கார்டு (D) டெபிட் கார்டு

30. The method pattern matching to detection network intrusion is called

(A) VPN (B) Anomoly detection

(C) Signature recognition (D) Encryption

இணையதள குறுக்கீடுகளை கண்டுபிடிப்பதற்கான வழிமுறை

(A) வி.ப்பி.என். (B) அனாமலி டிடெக்சன்

(C) சிக்னேச்சர் ரெக்ககனேசன் (D) என்கிரிப்சன்

31. The Working of RRBS was reviewed in 1986 and their continuance and greater involvement of the sponsor bank in their management was recommended by.

(A) Narasimmam Committee (B) Kelkar Committee

(C) Khusro Committee (D) Marathe Committee

கிராமப்புற வங்கிகளின் பயன்பாடும் அதனுடைய ஊக்க ஆதரவு வங்கிகளின் செயல்பாடும் 1986–ல் கீழ்க்கண்ட கமிட்டியால் சிபாரிசு செய்யப்பட்டது

(A) நரசிம்மம் கமிட்டி (B) கேல்கர் கமிட்டி

(C) குஸ்ரோ கமிட்டி (D) மராத்தோ கமிட்டி

32. The Short Term agricultural credit Institution is

(A) Primary Agricultural Co-op Credit Societies

(B) Central Co-operative Banks.

(C) State Co-operative Banks.

(D) All the above.

குறுகிய கால விவசாய கடன் வழங்கும் நிறுவனங்கள்

(A) தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள்

(B) மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள்

(C) தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி

(D) அனைத்தும்

33. NABARD has been established on recommendation of

(A) Talwar Committee
(B) Tandon Committee
(C) CRAFI CARD
(D) James Raj Committee

நபார்டு வங்கி நிறுவ காரணமாக இருந்த கமிட்டி

(A) தால்வார் கமிட்டி
(B) டான்டன் கமிட்டி
(C) சி.ஆர்.ஏ.எப்.ஐ. கார்டு
(D) ஜேம்ஸ் ராஜ் கமிட்டி

34. The Banking Regulation Act, 1949 came into force on

(A) March 16th 1949
(B) 15th August 1949
(C) 1st January 1949
(D) 19th July 1969

வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949 நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்

(A) 16.03.1949
(B) 15.08.1949
(C) 01.01.1949
(D) 19.07.1969

35. Section 45 ZA of the Banking Regulation Act 1949, relates to

(A) Appointment and termination of the services of Managing Director of a banking company.
(B) Return of unclaimed deposits.
(C) Nomination in respect of bank deposits.
(D) Advances allowed to priority sector.

வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949–ல் பிரிவு 45 (இசட்ஏ) 45 ZA எதைக் குறிக்கிறது?

(A) வங்கியில் நிர்வாக அதிகாரியை (Managing Director) நியமிப்பதும், நீக்குவதும்
(B) இதுவரை கோராமல் இருந்த வைப்பு தொகையை திருப்பித் தருதல்
(C) வங்கி சேமிப்புகளுக்கான வாரிசு உரிமை
(D) முன்னுரிமை கடன்கள்

36. The Basal Committee has defined capital in two tiers (Tier — I and Tier – II) Tier – I capital is known as.

(A) Net Capital
(B) Working Capital
(C) Core Capital
(D) Authorised Capital

பேசல் கமிட்டி தீர்மானித்துள்ள மூலதனங்கள் இரண்டு அடுக்கு (Tier — I and Tier – II) அடுக்கு – I (Tier – I) மூலதனம் கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்படுகிறது?

(A) நிகர மூலதனம்
(B) நடைமுறை மூலதனம்
(C) மைய மூலதனம்
(D) அனுமதியளிக்கப்பட்ட மூலதனம்

37. What is time limit for funds to be transacted in Call Money Market

(A) One day (B) Twelve hours

(C) Over night basis (D) No such limit

கால் மணி (Call Money Market) –ல் பண பரிமாற்றத்திற்கான நேர வரைமுறை

(A) 1 நாள் (B) 12 மணி

(C) இரு இரவுக்குள் (D) எந்த வரைமுறையும் இல்லை

38. Certificate of deposit is issued for a period of

(A) 15 days to 12 months (B) Over night

(C) 15 days to 240 months (D) 60 months

'வைப்புக்களுக்கான சான்று' கீழ்க்கண்ட எவ்வளவு நாட்களுக்கு வழங்கப்படுகிறது?

(A) 15 நாள் முதல் 12 மாதங்கள் வரை (B) ஒரு இரவுக்குள்

(C) 15 நாள் முதல் 240 மாதங்கள் வரை (D) 60 மாதங்கள்

39. As per provision of sec.12 of Bank Regulation Act 1949 the minimum ratio between authorised, subscribed and paid up capital of a banking company should be

(A) 4:2:1 (B) 1:1:1

(C) 2:1:1 (D) 2:2:1

வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949 பிரிவு –12ன் படி குறைந்த பட்ச விகிதாச்சாரம் (வங்கியின் அனுமதிக்குட்ப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட மூலதனங்களுக்கு இடையேயான விகிதாச்சாரம்)

(A) 4:2:1 (B) 1:1:1

(C) 2:1:1 (D) 2:2:1

40. To restrict expansion of credit the Reserve Bank.

(A) raises the bank rate (B) reduces the bank rate

(C) freezes the bank rate (D) watch the bank rate

கடன் வழங்குவதை குறைப்பதற்கான ரிசார்வ் வங்கி மேற்கொள்ளும் வழிகள்

(A) வங்கி வட்டியை அதிகரித்தல் (B) வங்கி வட்டியை குறைத்தல்

(C) வங்கி வட்டியை நிறுத்தி வைத்தல் (D) வங்கி வட்டியை கண்காணித்தல்

41. Which of the following form the not part of general insurance business

(A) Fire insurance (B) Cattle Insurance

(C) Crop Insurance (D) Life Insurance

பொதுக்காப்பீட்டு நிறுவனங்கள் மேற்கொள்ள கூடாத காப்பீட்டு திட்டம்

(A) நெருப்புக் காப்பீடு (B) கால்நடை காப்பீடு

(C) பயிர் காப்பீடு (D) ஆயுள் காப்பீடு

42. In case of custody of articles, relationship between bank and customer is

(A) Agent and principal
(B) Bailee and Bailor
(C) Lessor and Lessee
(D) Creditor and Debtor

வங்கியின் பாதுகாப்பில் ஒரு பொருள் இருக்கும் போது வங்கியாளருக்கும், வாடிக்கையாளருக்கும் இடையான உறவு முறை

(A) முகவர் மற்றும் முதலாளி
(B) பிணையர் மற்றும் பிணைதாரர்
(C) குத்தகைக்கு விடுபவர் மற்றும் குத்தகைதாரர்
(D) கடனீந்தோர் மற்றும் கடனாளி

43. Current deposits fall under

(A) Time liability
(B) Demand liability
(C) Contingent liability
(D) Other liability

நடப்பு வைப்புகள் கீழ்க்கண்டவற்றில் எதில் சேர்க்கப்படுகிறது?

(A) கால பொறுப்பு
(B) கேட்பு பொறுப்பு
(C) சாதல்வார் செலவின பொறுப்பு
(D) இதர பொறுப்பு

44. A savings account is transferred to inoperative Accounts is there is not operation in the account for the last

(A) 2 Years
(B) 3 Years
(C) 4 Years
(D) 5 Years

ஒரு சேமிப்பு கணக்கில் எந்த வித வரவும் செலவும் இல்லாத போது கீழ்க்கண்ட வருடங்கள் கழித்து நடைமுறைப்படுத்தபடாத சேமிப்பு கணக்காக கருதப்படும்?

(A) 2 வருடங்கள்
(B) 3 வருடங்கள்
(C) 4 வருடங்கள்
(D) 5 வருடங்கள்

45. Which of the following is a negotiable instrument?

(A) RTGS
(B) Mail Transfer
(C) Demand Draft
(D) NEFT

கீழ்க்கண்டவற்றுள் எது மாற்றத்தக்க ஆவணம்?

(A) நிகழ்நேர மொத்த தீர்வு
(B) மின்னணு மாற்றம்
(C) கேட்பு வரைவோலை
(D) தேசிய மின்பணப் பரிமாற்றம்

46. Currency chest and the money held therein is the property of

(A) Reserve bank of India

(B) State Bank of India

(C) Government of India

(D) The bank which maintains the currency chest

பண பாதுகாப்பு பெட்டகத்தில் (கரன்சி செஸ்ட்) உள்ள பணத்திற்கான உரிமையாளர்?

(A) ரிசிர்வ் பேங்க் ஆப் இந்தியா

(B) ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா

(C) இந்திய அரசாங்கம்

(D) பண பாதுகாப்பு பெட்டகத்தைவைத்துள்ள வங்கி

47. In Garnishee order, bank is known as

(A) Judgement Creditor

(B) Judgement Debtor

(C) Paying Banker

(D) Garnishee

ஒரு "கார்நிஷி" உத்தரவில் வங்கியாளர் கீழ்க்கண்டவாறு அறியப்படுகிறார்?

(A) நீதிமன்ற தீர்ப்பின்படி கடனீந்தோர் (Judgement Creditor)

(B) நீதிமன்ற தீர்ப்பின்படி கடனாளி (Judgement Debtor)

(C) கொடுத்த வங்கியாளர் (Paying Banker)

(D) கார்நிஷி (Garnishee)

48. "Escrow" is a term used to denote

(A) negotiability of the instrument

(B) an instrument incomplete in respect of date

(C) conditional delivery of the instrument

(D) an instrument without consideration

எஸ்குரோ ("Escrow") என்பதன் பதம் குறிப்பிடுவது

(A) ஒரு ஆவணத்தின் மாற்றத்தக்க தன்மையை

(B) தேதி குறிப்பிடப்படாமல் உள்ள ஒரு ஆவணம்

(C) குறிப்பிட்ட சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு கொடுக்கப்படும் ஆவணம்

(D) எவ்வித பிரதி பலனும் இல்லாமல் பெற்ற ஆவணம்

49. Expansion of the Term "NPA" is

(A) No profit Account
(B) New Producer Account
(C) Non Performing Asset
(D) New performer Account

என்.ப்பி.ஏ என்பதன் விரிவாக்கம்

(A) லாபமற்ற கணக்கு
(B) புதிய உற்பத்தியாளர் கணக்கு
(C) செயலற்ற ஆஸ்தி
(D) புதிய பங்கேற்பாளர் கணக்கு

50. The scale of finance for crop loan is decided by

(A) State bank of India
(B) RBI
(C) Technical Committee at District Level
(D) Lead Bank

பயிர் கடனுக்கான கடன் தொகையை நிர்ணயிப்பது

(A) ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா
(B) ரிசிர்வ் பேங்க் ஆப் இந்தியா
(C) மாவட்ட அளவிலான தொழில்நுட்பக் குழு
(D) முன்னோடி வங்கி

51. Marginal farmers means:

(A) Farmers having dry land upto 2.5 acres
(B) Farmers having wet land upto 1.25 acres
(C) Farmers having dry land upto 2.5 hectares
(D) Farmers having land above 2.5 acres

குறு விவசாயி என்று குறிப்பிடுவது?

(A) 2.5 ஏக்கர் வரை புன்செய் நிலம் வைத்துள்ள விவசாயி
(B) 1.25 ஏக்கர் வரை நன்செய் நிலம் வைத்துள்ள விவசாயி
(C) 2.5 ஹெக்டேர் வரை புன்செய் நிலம் வைத்துள்ள விவசாயி
(D) 2.5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயி

52. Audit of a Cooperative Bank (DCCB) shall be appointed from among the panel approved by.

(A) Registrar of Co-operative societies
(B) Director of Cooperative Audit
(C) NABARD
(D) As per Bank Discretion

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கான தணிக்கை அதிகாரிகள் நியமிக்கும் அமைப்பை அங்கீகாரம் செய்பவர்கள்?

(A) கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்
(B) கூட்டுறவு சங்க தணிக்கைகளின் இயக்குநர்
(C) நபார்டு
(D) வங்கியின் விருப்பப்படி

53. In accounting parlance, cash flow means:-
(A) Net Profit after taxes
(B) Net Profit of Dividend payout
(C) Net Profit and Non cash expenses
(D) Net Profit

வணிகவியலின்படி பணப்பழக்கம் என்பது
(A) வரிபோக எஞ்சி உள்ள இலாபம்
(B) பங்குதாரர்களுக்கு கொடுத்தது போக எஞ்சி உள்ள இலாபம்
(C) எஞ்சி உள்ள நிகர இலாபமும் பண பரிமாற்றம் இல்லாத செலவுகளும்
(D) எஞ்சி உள்ள இலாபம்

54. Net working capital means
(A) Total Current assets
(B) Total Assets
(C) Surplus of long term sources over long term uses
(D) Other Liabilities.

எஞ்சி உள்ள நடைமுறை மூலதனம் என்பது
(A) மொத்தமான நடைமுறை சொத்துக்கள்
(B) மொத்த சொத்துக்கள்
(C) நீண்டகால சொத்துக்களுக்கும் நீண்டகால கடனுக்குமான வித்தியாசம்
(D) மற்ற கடன்கள்

55. Matured term deposit is classified as
(A) Term deposit
(B) Demand Deposit
(C) Contingent Liability
(D) It is only liability having no classified

முதிர்வடைந்த ஒரு வைப்புத் தொகை கீழ்க்கண்டவாறு அழைக்கப்படுகிறது?
(A) கால வைப்பு
(B) கேட்பு வைப்பு
(C) சில்லறை பொறுப்பு
(D) பொறுப்பு மட்டுமே எந்த பிரிவும் சேராது

56. What is the object of lending?
(A) To comply RBI directives
(B) To comply Govt directions on various schemes
(C) To generate profit
(D) To bring down percentage of NPA

கடன் வழங்குவதற்கான காரணம்?
(A) ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு
(B) அரசாங்கத்தின் உத்தரவுகளுக்கு பணிந்து
(C) இலாபம் ஈட்ட
(D) வராக்கடன்களை குறைக்க

57. Who issues Government securities?

(A) The Central Government

(B) Reserve Bank of India

(C) Respective State government who raising the funds through it

(D) SEBI

அரசாங்க கடன் பத்திரங்களை வெளியிடுவது?

(A) மத்திய அரசு

(B) ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா

(C) மாநில அரசுகள்

(D) செபி

58. 'OLAP' refers to

(A) Online application processing

(B) Online presentation

(C) Online analytical processing

(D) Online transaction processing

'OLAP' என்று குறிப்பிடப்படுவது

(A) நிகழ்நிலை மனு செய்முறை

(B) நிகழ்நிலை அறிமுகம்

(C) நிகழ்நிலை பகுத்தறியும் செய்முறை

(D) நிகழ்நிலை நடவடிக்கை செய்முறை

59. In cheque Truncation system

(A) A few details of the cheque are transmitted

(B) Physical cheque is verified of the destination

(C) Image of the cheque is transmitted

(D) Small size of the cheque is printed

காசோலை குறுக்கப்பட்ட (Truncation) முறையில்

(A) காசோலை பற்றிய சில விவரங்கள் மட்டுமே அனுப்பப்படுகிறது

(B) அசல் காசோலை பரிசோதிக்கப்படுகிறது

(C) காசோலையின் படிவம் அனுப்பப்படுகிறது

(D) சிறிய அளவில் காசோலை அச்சடிக்கப்படுகிறது

60. Which one is the 3rd principles of Co-operation?

(A) Concern for community

(B) Voluntary and open membership

(C) Member economic participation

(D) Democratic member control

கூட்டுறவில் மூன்றாவது கொள்கையாக கடைபிடிக்கப்படுவது எது?

(A) சமுதாயத்திற்கான அக்கறை

(B) தன்னிச்சையான திறந்த மனதுடன் கூடிய உறுப்பினர்

(C) உறுப்பினர்களின் பொருளாதார பங்களிப்பு

(D) ஜனநாயக முறையில் உறுப்பினர்களின் கட்டுப்பாடு

61. How many types in Agricultural Credit

(A) 1 (B) 3

(C) 2 (D) 4

எத்தனை விதமான விவசாய கடன்கள் உள்ளது?

(A) 1 (B) 3

(C) 2 (D) 4

62. Which source of fund is life blood of co-operative society?

(A) Government participation (B) Deposits

(C) Borrowings (D) Share Capital

கூட்டுறவு சங்கத்தின் உயிர் ஆதாரமாக விளங்கும் மூலதனம் எது?

(A) அரசாங்கத்தின் பங்களிப்பு (B) வைப்புகள்

(C) கடன்கள் (D) பங்கு மூலதனம்

63. In which year SARFAESI ACT was introduced?

(A) 2001 (B) 2004

(C) 2002 (D) 2006

சர்பைசி சட்டம் (SARFAESI ACT) எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

(A) 2001 (B) 2004

(C) 2002 (D) 2006

64. Banks were nationalised first time on

(A) 19.07.1969 (B) 15.08.1947

(C) 26.01.1950 (D) 15.04.1980

வங்கிகள் முதன் முறையாக தேசிய உடைமையாக்கப்பட்ட நாள்

(A) 19.07.1969 (B) 15.08.1947

(C) 26.01.1950 (D) 15.04.1980

65. The RBI was nationalised?

(A) 1925 (B) 1931

(C) 1934 (D) 1926

'ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா' தேசிய உடைமையாக்கப்பட்ட ஆண்டு

(A) 1925 (B) 1931

(C) 1934 (D) 1926

66. Prime lending rate (PLR) is decided by

(A) RBI (B) Indian Banks Association

(C) Prime borrowers of the Bank (D) Individual bank

ப்ரைம் லெண்டிங் ரேட் (PLR)–ஐ தீர்மானிப்பது

(A) ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா (B) இந்திய வங்கிகள் கூட்டமைப்பு

(C) வங்கியின் முக்கிய கடனாளிகள் (D) அந்தந்த வங்கிகள்

67. One rupee note bears the signature of

(A) Secretary, Ministry Finance Govt. of India

(B) Deputy Governor of RBI

(C) President of India

(D) Vice President of India

1 ரூபாய் நோட்டில் கையொப்பம் இட்டுள்ளவர் யார்?

(A) இந்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம்

(B) ரிசர்வ் பேங்க் இந்தியாவின் துணை கவர்னர்

(C) இந்திய குடியரசு தலைவர்

(D) துணை குடியரசு தலைவர்

68. Two Parallel transverse lines across the cheque is called:-

(A) Crossing (B) Endorsement

(C) Assignment (D) Transfer

காசோலையின் குறுக்காக போடப்படும் இரண்டு கோடுகள்

(A) குறுக்கிடுதல் (B) கருத்துக் குறிப்பு

(C) உரிமை மாற்றப்பத்திரம் (D) இடம் மாற்றம்

69. A Cheque may be drawn for a maximum period of

(A) 3 months (B) 6 months

(C) One year (D) For ever

ஒரு காசோலை அதிக பட்சமாக செல்லுபடியாகும் நாள்

(A) 3 மாதம் (B) 6 மாதம்

(C) 1 வருடம் (D) எவ்வளவு காலத்திற்கும்

70. Banks prepare their accounts for the

(A) Calender year (B) Financial year

(C) Assessment year (D) Co-operative year

வங்கிகள் தங்களது ஆண்டு கணக்களை முடிப்பது

(A) நடைமுறை ஆண்டு (B) நிதி ஆண்டு

(C) மதிப்பீடு ஆண்டு (D) கூட்டுறவு ஆண்டு

71. Net profit is

(A) An Asset
(B) A Liability
(C) An Expenditure
(D) An extra ordinary income

நிகர இலாபம் என்பது ஒரு நிறுவனத்தின்

(A) சொத்து
(B) கடன்
(C) செலவினம்
(D) எதிர்பாராத வருமானம்

72. The power of sale without intervention of the court is given to the mortgagee in the case of

(A) Equitable mortgage
(B) English mortgage
(C) Simple mortgage
(D) Usufructuary mortgage

நீதிமன்றங்களின் தலையீடு இல்லாமல் ஒரு அடமானச் சொத்தை விற்க வகை செய்யும் அடமானத்தின் பெயர்

(A) நியாயமான அடமானம்
(B) ஆங்கில அடமானம்
(C) எளிய அடமானம்
(D) பலன் அளிக்க கூடிய அடமானம்

73. NEFT settlement is done in

(A) Hourly batches
(B) Real time
(C) Daily batches
(D) Twice in a day

தேசிய மின்பணப் பரிமாற்றம் மூலம் பணபரிவர்த்தனை கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது?

(A) மணிக்கு ஒரு தரம்
(B) அவ்வப்போது
(C) தினசரி
(D) ஒரு நாளுக்கு இரண்டு தடவை

74. Cash Reserve Ratio (CRR) and Statutory Liquidity Ratio (SLR) are related

(A) Cash Management
(B) Liquidity Management
(C) Risk Management
(D) Administrative Management

ரொக்க கையிருப்பு விகிதம் மற்றும் சட்டப்பூர்வ நீர்ம ஆதார விகிதம் ஆகியவை எதனுடன் தொடர்புடையது

(A) பண மேலாண்மை
(B) ரொக்க நீர்ம மேலாண்மை
(C) அபாய மேலாண்மை
(D) நிர்வாக மேலாண்மை

75. Who can expel a member from the Co-op Society?

(A) General Body
(B) Register of Co-op Society
(C) Board of Directors
(D) Co-operative Court

கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினரை நீக்கும் அதிகாரம் பெற்றவர் யார்?

(A) பொதுப் பேரவை
(B) கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்
(C) நிர்வாக இயக்குநர்கள்
(D) கூட்டுறவு நீதிமன்றம்

76. ———————— are not commercial Banks

(A) Public sector banks
(B) Co-operative Banks
(C) Private sector banks
(D) Foreign Banks

இதில் வணிக வங்கிகளாக இல்லாத வங்கிகள் எது?

(A) பொதுத்துறை வங்கிகள்
(B) கூட்டுறவு வங்கிகள்
(C) தனியார்துறை வங்கிகள்
(D) அயல்நாட்டு வங்கிகள்

77. The Term 'Banking' has been comprehensively defind under the

(A) R.B.I. ACT 1934
(B) Banking Regulation Act 1949
(C) Companies Act 1956
(D) The Government of India Act 1935

வங்கியியல் ('Banking') என்ற பதம் விசாலமான முறையில் கீழ்க்கண்ட சட்டத்தால் வரையறுக்கப்பட்டது

(A) ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா சட்டம் 1934
(B) வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949
(C) நிறுவனங்கள் சட்டம் 1956
(D) இந்திய அரசுச் சட்டம் 1935

78. When a customer deposits money with his bank. The relationship between the banker and the customer is

(A) Banker — a creditor
(B) Banker — a debtor
(C) Customer — a creditor
(D) Customer — a debtor

வாடிக்கையாளர் தனது வங்கில் வைப்பீடு செய்யும்போது வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் உள்ள உறவுமுறை

(A) வங்கியாளர் – கடன் உறவுமுறை
(B) வங்கியாளர் – கடனாளி
(C) வாடிக்கையாளர் – கடன் கொடுத்தவர்
(D) வாடிக்கையாளர் – கடனாளி

79. The Bank accept deposit should be in the form of

(A) Cash
(B) Securities
(C) Savings certificates
(D) Gold bullion

வங்கி வைப்புகள் பெறும்போது எந்த வடிவில் பெறுகிறது?

(A) பணம்
(B) கடன் பத்திரங்கள்
(C) சேமிப்புச் சான்றுகள்
(D) தங்கக் கட்டி

80. What is the name of the debit cards issued by National Payment Corporation of India?

(A) Visa Card
(B) Master Card
(C) Rupay Card
(D) Axa Card

"தேசிய செலுத்துதல் கழகம்" மூலம் வழங்கப்படும் கடன் அட்டையின் பெயர்?

(A) விசா கார்டு
(B) மாஸ்டர் கார்டு
(C) ரூபே கார்டு
(D) அக்ஸா கார்டு

———————

**037/DM/19**

Tc – 61

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR OFFICERS OF THE CO-OPERATIVE DEPARTMENT – CO-OPERATIVE CREDIT AND BANKING

(Without Books)

Maximum Time : 30 minutes | Maximum Marks : 20

***IMPORTANT INSTRUCTIONS***

## DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**Write the answer any FOUR of the following questions.**

கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்குகளுள் ஏதேனும் <u>நான்கு</u> வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

**(4 × 5 = 20)**

1. Describe the functions of Reserve Bank of India.

   இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்பாடுகளை விவரி.

2. Describe : NABARD functions.

   நபார்டு வங்கியின் செயல்பாடுகளை விவரி.

**[Turn over**

3. Describe Advantages of e-banking.

இணையதளம் மூலம் வங்கிகளின் செயல்பாடுகளின் சாதகங்கள் யாவை?

4. Describe types of Banks.

வங்கிகளின் வகைப்பாடுகளை விவரி.

5. Describe Bank Passbook and Rules.

வங்கி கணக்குப் புத்தகமும், விதிமுறைகளையும் தருக.

6. Management of NPA's – Describe.

செயல்படாத ஆஸ்திகளின் மேலாண்மைகளை விவரி.

———————